**அரசுத்தேர்வுகள் இயக்ககம், சென்னை–6**

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத்தேர்வு – மார்ச் 2024**

**கணினி அறிவியல் – விடைக்குறிப்புகள் (தமிழ்வழி)**

**குறிப்பு :**

1. நீலம் அல்லது கருப்பு மையினால் எழுதப்பட்ட விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்தல் வேண்டும்.
2. பகுதி 1-ல் கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினை தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதப்பட்டிருக்க வேண்டும்.
3. விடை குறியீடு அல்லது விடை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்று தவறாக இருப்பின், அதற்கு பூஜ்யம் மதிப்பெண் மட்டுமே வழங்க வேண்டும்.

**மொத்த மதிப்பெண்கள் :** 70

**பகுதி – I**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 15×1=15

| வினா எண் | குறியீடு | விடை | மதிப்பெண் |
|---|---|---|---|
| 1 | இ | Big O | 1 |
| 2 | இ | Abstract datatype | 1 |
| 3 | ஆ | F5 | 1 |
| 4 | அ | இடைமுகம் | 1 |
| 5 | அ | அணுகல் கட்டுப்பாடு | 1 |
| 6 | ஈ | [] | 1 |
| 7 | இ | சான்றுருவாக்கல் | 1 |
| 8 | ஈ | x % 4 == 0 | 1 |
| 9 | ஆ | σ | 1 |
| 10 | அ | [10,20,35,40,50] | 1 |
| 11 | ஆ | Flat File | 1 |
| 12 | ஈ | select | 1 |
| 13 | **விடை எழுத முயற்சி செய்திருப்பின் முழு மதிப்பெண் வழங்கலாம்.** | | 1 |
| 14 | ஈ | டேஷ் போர்டு | 1 |
| 15 | ஈ | ORDER BY | 1 |

**பகுதி – II**

எவையேனும் **ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **24–**க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். **6×2**=12

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 16 | அருவமாக்க தரவு வகை என்பது பொருள்களுக்கான வகை(அல்லது இனக்குழு) ஆகும். | 2 |
| 17 | **1.** கணித செயற்குறிகள் 2. உறவுநிலை (அ) ஒப்பீடுசெயற்குறிகள்<br>**3.** தருக்க செயற்குறிகள் **4.** மதிப்பிருத்து செயற்குறிகள்<br>**5.** நிபந்தனை செயற்குறி (அல்லது) மும்முச் செயற்குறிகள்<br>**(எவையேனும் நான்கு)** | 2 |
| 18 | ▪ தரவு கட்டமைப்பில் (பட்டியலில்) உள்ள ஒரு உருப்படியைத் தேடி கண்டுபிடிக்கும் வழிமுறை தேடல் எனப்படும்.<br>▪ வரிசைமுறைத் தேடல் மற்றும் இருமத்தேடல் என இருவகைப்படும் | 2 |

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 19 | i. பயனர் வரையறுக்கும் செயற்கூறுகள்<br>ii. உள்ளிணைந்த செயற்கூறுகள்<br>iii. லாம்டா செயற்கூறுகள் மற்றும்<br>iv. தற்சுழற்சி செயற்கூறுகள் | 2 |
| 20 | i.கோட்டு வரைவு ii.ஸ்கேட்டர் வரைவு<br>iii.ஹிஸ்டோகிராம் iv.பெட்டி வரைவு<br>v.பட்டை விளக்கப்படம் vi.வட்ட விளக்கப்படம்<br>**(எவையேனும் நான்கு)** | 2 |
| 21 | ▪ படிநிலை மாதிரியில், ஒரு குழந்தை பதிவு ஒரே ஒரு பெற்றோர் முனையத்தை மட்டுமேகொண்டிருக்கும்.<br>▪ வலையமைப்பு மாதிரியில் ஒரு குழந்தைக்கு பல பெற்றோர் முனையங்கள் இருக்கலாம். இது தரவை பலவற்றிலிருந்து பலவற்றிற்கு (many to many) உறவு நிலையை குறிப்பிடுகிறது.<br>▪ வலையமைப்பு மாதிரி எளிமையாகவும், விரைவாகவும் தரவுகளை அணுக பயன்படுகிறது.<br>**(எவையேனும் இரண்டு)** | 2 |
| 22 | CSV கோப்பானது ஒவ்வொரு வரிசையிலும் காற்புள்ளி அல்லது வேறு ஏதேனும் ஒரு பிரிப்பானைக் கொண்டு பிரிக்கப்பட்ட பல புலங்களை கொண்டுள்ள பயனர் படிக்கக் கூடிய உரை கோப்பாகும். | 2 |
| 23 | fetchall() செயற்கூறு அனைத்து வரிசைகளையும் தரவுத்தள அட்டவணையில் இருந்து பெற பயன்படுகிறது. | 2 |
| 24 | ▪ pop()செயற்கூறு குறிப்பிட்ட ஒரு உறுப்பை அதன் சுட்டெண்ணை பயன்படுத்தி நீக்க பயன்படுகிறது.<br>▪ pop()செயற்கூறு சுட்டெண் கொடுக்கப்படாத போது Listன் கடைசி உறுப்பை நீக்கி அதை காண்பிக்கிறது.<br>▪ pop() செயற்கூறு Listல் இருந்து ஒரு உறுப்பை மட்டும் நீக்க பயன்படுகிறது.<br>**(ஏதேனும் ஒன்று)** | 2 |

## பகுதி – III

எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **33**–க்கு கட்டாயமாக விடையளிக்க வேண்டும். **6×3=18**

<table>
<tr><th>வினா எண்</th><th>விடை</th><th>மதிப்பெண்</th></tr>
<tr><td>25</td><td>

| **Pure**செயற்கூறு | **Impure** செயற்கூறு |
|---|---|
| Pure செயற்கூறுவின் திருப்பி அனுப்பும் மதிப்பு முற்றிலும் செயலுருபுகளை பொறுத்தே அமையும். | Impure செயற்கூறுவின் திருப்பி அனுப்பும் மதிப்பு முற்றிலும் செயலுருபுகளை பொறுத்து அமையாது. |
| Pure செயற்கூறினை அதே செயலுருபுகளைகொண்டு அழைத்தால் எப்பொழுதும் அதே திருப்பி அனுப்பும் மதிப்பே கிடைக்கும் | Impure செயற்கூறினை அதே செயலுருபுகளை கொண்டு அழைத்தால் வெவ்வேறான திருப்பி அனுப்பும் மதிப்பு கிடைக்கும். |
| இது எந்த பக்க விளைவுகளையும் கொண்டிருக்காது. | இது பக்க விளைவுகளை கொண்டிருக்கும். |
| இந்த செயற்கூறு செயலுருபுருகளைமாற்றம் செய்யாது. | இந்த செயற்கூறு செயலுருபுருகளை மாற்றம் செய்யலாம். |

**(ஏதேனும் மூன்று மட்டும் போதுமானது)**</td><td>3</td></tr>
<tr><td>26</td><td>list–ன் உறுப்புகளை இரு வழியில் அணுகலாம்.<br>
**1] பன்மடங்கு மதிப்பிருத்தல்:**<br>
இம்முறையில், List–ன் உறுப்புகள் பிரிக்கப்பட்டு, அனைத்து உறுப்புகளும் வேறுபெயர்களுடன் இணைக்கப்படுகிறது.<br>
எ.கா:<br>
lst := [10, 20]<br>
x, y := lst<br>
✓ மேலே காணும் எடுத்துக்காட்டில், x–ன் மதிப்பு 10 என்றும், y–ன் மதிப்பு 20 என மதிப்பிருத்தப்படும்.<br>
**2] உறுப்பு தேர்ந்தெடுப்பு செயற்குறி:**<br>
சதுர அடைப்புக்குறிக்குள் உள்ள மதிப்பு, முந்தைய கோவையின் மதிப்பாக தேர்வு செய்யும்<br>
எ.கா: lst [0] = 10<br>
**(அல்லது)**<br>
**ஏதேனும் பொருத்தமான எடுத்துக்காட்டு**</td><td>1<br>1<br>1</td></tr>
<tr><td>27</td><td>Asymptotic குறியீடுகள் நேரம் மற்றும் இடச்சிக்கலைப் பற்றிய அர்த்தமுள்ள கூற்றுகளைப் பயன்படுத்தும் ஒரு மொழியாகும். நேரச்சிக்கலைக் குறிக்கும்மூன்று Asymptotic குறியீடுகள் பின்வருமாறு:<br>
1. Big O - மிக மோசமான நிலை<br>
2. BigΩ - சிறந்த நிலை<br>
3. Big Θ - சிக்கலான நிலை அல்லது கீழ் எல்லை = மேல் எல்லை</td><td>1<br>2</td></tr>
</table>

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 28 | **நிரல்:**<br>a=int(input("Enter the first number:"))<br>b=int(input("Enter the second number:"))<br>c=int(input("Enter the third number:"))<br>if (a>b) and (a>c):<br>        print(a, " is the largest number")<br>elif (b>c):<br>        print(b, " is the largest number ")<br>else:<br>        print(c, " is the largest number ")<br>**(ஒரு பொருத்தமான எடுத்துக்காட்டு)** | **3** |
| 29 | **(அ) capitalize():**<br>சரத்தின் முதல் குறியுருவை பெரிய எழுத்தாக மாற்ற பயன்படுகிறது.<br>**எடுத்துக்காட்டு:**<br>>>> city=“tamilnadu”<br>>>> print(city.capitalize())<br>Tamilnadu<br>**ஏதேனும் ஒரு பொருத்தமான எடுத்துக்காட்டு** | **1** |
| | **(ஆ) swapcase():**<br>சரத்தில் உள்ள எழுத்து பெரிய எழுத்தாக இருந்தால் அது சிறிய எழுத்தாகவும், நேர்மாறாகவும் திருப்பும்.<br>**எடுத்துக்காட்டு:**<br>>>>str1="tamil NADU"<br>>>> print(str1.swapcase())<br>TAMIL nadu<br>**ஏதேனும் ஒரு பொருத்தமான எடுத்துக்காட்டு** | **1**<br><br>**1** |
| 30 | **ஆக்கி வரையறுப்பின் பொது வடிவம்:**<br>• இனக்குழுவின் சான்றுரு பயன்பாட்டிற்கு வரும் போது ஆக்கி என்னும் சிறப்பு செயற்கூறு தானகவே இயக்கப்படுகிறது.<br>• பைத்தானில் __init__ என்னும் செயற்கூறு ஆக்கியாக செயல்படுகிறது.<br>**(அல்லது)**<br>def __init__(self, [args ……..]):<br>        <statements><br><br>**அழிப்பி வரையறுப்பின் பொது வடிவம்:**<br>• இனக்குழுவில் உருவாக்கப்பட்ட பொருளின் பயன்பாடு முடிவுக்கு வரும்போது அழிப்பி என்னும் சிறப்பு செயற்கூறு தானகவே இயக்கப்படுகிறது.<br>• பைத்தானில் __del__ என்னும் செயற்கூறு அழிப்பியாக செயல்படுகிறது.<br>**(அல்லது)**<br>def __del__(self):<br>        <statements> | 1½<br><br>1½ |

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 31 | ▪ ஒரு நிரலில் சில செயல்பாடுகளை தானியங்குப்படுத்துதல்.<br>▪ தரவு தொகுப்பிலிருந்து தகவலைப் பிரித்தெடுத்தல்.<br>▪ பழமையான நிரலாக்க மொழிகளுடன் ஒப்பிடும் போது, குறைந்த நிரல் குறிமுறையைக் கொண்டது.<br>▪ பயன்பாடுகளுக்கு புதிய செயல்பாடுகளை கொண்டு வர முடியும். மேலும், சிக்கலான அமைப்புகளை ஒருங்கமைக்க முடியும்.<br>**(ஏதேனும் மூன்று பயன்பாடுகள் எழுதியிருந்தால் போதுமானது)** | 3 |
| 32 | குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்ட பதிவுகளை மட்டுமே பிரித்தெடுக்க WHERE துணைநிலை கூற்று பயன்படுகிறது.<br>**எடுத்துக்காட்டு:**<br>cursor.execute("SELECT DISTINCT (Grade) FROM student where gender='M'")<br>**(அல்லது )**<br>**பொருத்தமான எடுத்துக்காட்டு** | 2<br><br>1 |
| 33 | ▪ **Commit -** தரவுத்தள பரிவர்த்தனையை நிரந்தரமாக சேமிக்கும்.<br>▪ **Roll back -** ஒரு தரவுத்தளத்தை முந்தைய commit நிலைவரை மீட்டெடுக்கும்.<br>▪ **Save point -** Rollback செய்வதற்கு ஏதுவாக தரவுத்தள பரிவர்த்தனையை தற்காலிகமாக சேமிக்கும் | 1<br>1<br><br>1 |

**பகுதி – IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 ×5=25**

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 34(அ) | தரவு அருவமாக்கத்தினை செயல்படுத்த ஆக்கிகள் (Constructor) மற்றும் செலக்டர் (Selectors) என்ற இரண்டு செயற்கூறுகள் பயன்படுகிறது.<br>➢ ஆக்கி செயற்கூறுகள் அருவமாக்கம் தரவு வகையை கட்டமைக்க பயன்படுகிறது.<br>➢ செலக்டர் செயற்கூறுகள் தகவல்களை தரவு வகையிலிருந்து பெறுவதற்கு பயன்படுகிறது.<br>**எடுத்துக்காட்டாக.**<br>city என்று ஒரு அருவமாக்க தரவுவகையை எடுத்துக்கொள்வோம். city என்ற பொருள் நகரத்தின் பெயர், அட்சரேகை மற்றும் தீர்க்கரேகை பற்றிய தகவல்களை சேமித்திருக்கும்.<br>**city := makecity (name, lat, lon)**<br>✓ இங்கு makecity(name, lat, lon) என்ற செயற்கூறு ஆக்கியாகும். இது city எனும் பொருளை உருவாக்கும் போது name, lat, lon ஆகிய மதிப்புகள் அளபுருவாக அனுப்பப்படுகிறது.<br>✓ **getname(city), getlat(city)** மற்றும் **getlon(city)** ஆகியன செலக்டார் செயற்கூறுகளாகும். இவை city எனும் பொருளிலிருந்து தகவல்களை பெற்றுத் தரும் செலக்டர் செயற்கூறுகளாகும். | 3<br><br><br><br><br>2 |
| | **(அல்லது)** | |

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 34 (ஆ) | **இருமத்தேடல்:**<br>▪ பாதி இடைவெளித் தேடல் என்றும் அழைக்கலாம்.<br>▪ வரிசைப்படுத்தப்பட்ட அணிக்குள் இலக்கு மதிப்பின் இடத்தை கண்டுபிடிக்கிறது.<br>▪ பிரித்து–கைப்பற்றுதல் நெறிமுறையைப் போல் இருமத் தேடலைச் செய்து மடக்கை நேரத்தில் நிறைவேற்றப்படும்.<br>**பொருத்தமான ஒரு எடுத்துக்காட்டு மற்றும் விளக்கம்** | 2<br><br>3 |
| 35 (அ) | **(i) input() செயற்கூறு:**<br>input() செயற்கூறு நிரலை இயக்கும் போது தரவுகளை உள்ளீடாக பெற்றுக் கொள்ள பயன்படுகிறது.<br>**தொடரியல்:**<br>Variable = input( “prompt string” )<br>**பொருத்தமான ஒரு எடுத்துக்காட்டு**<br>**(ii) print() செயுற்கூறு:**<br>print() செயற்கூறு நிரலை இயக்கும்பொழுது தரவுகளை வெளியிட பயன்படுகிறது.<br>**தொடரியல்:**<br>print( “String’’ )<br>print( variable )<br>print( “String”, variable )<br>print (“String1”, variable, “String2”, variable, “String3” …)<br>**(ஏதேனும் ஒரு தொடரியல் மட்டும்)**<br>**பொருத்தமான ஒரு எடுத்துக்காட்டு** | 2<br><br>2<br><br>1 |
| | **(அல்லது)** | |
| (ஆ) | • உள்ளமை வரையெல்லை<br>• இணைக்கப்பட்ட வரையெல்லை<br>• முழுதளவிய வரையெல்லை<br>• உள்ளிணைந்த வரையெல்லை<br>அனைத்திற்கும் விளக்கம் மற்றும் பொருத்தமான எடுத்துக்காட்டு<br>**(அல்லது)**<br>உள்ளமை வரையெல்லை<br>விதிமுறைகள் மற்றும் பொருத்தமான எடுத்துக்காட்டு<br>முழுதளவிய வரையெல்லை<br>விதிமுறைகள் மற்றும் பொருத்தமான எடுத்துக்காட்டு | 2<br><br>3<br><br>2½<br><br>2½ |

| வினா எண் | விடை | மதிப்பெண் |
|---|---|---|
| 36 (அ) | ▪ range() செயற்கூறை பயன்படுத்தி தொடர் மதிப்புகளுடன்LIST-ஐ உருவாக்கலாம்.<br>▪ range()செயற்கூறு ஒரு உள்ளிணைந்த செயற்கூறாகும். இது, இரண்டு எண் இடைவெளிக்குட்பட்ட மதிப்புகளை உருவாக்கும்.<br>**தொடரியல்:**<br>range (start, stop,[step])<br><br>**(பொருத்தமான ஒரு எடுத்துக்காட்டு)** | 3<br><br><br><br><br>2 |
| **(அல்லது)** | | |
| (ஆ) | <u>**உறவுநிலை இயற்கணித செயற்குறிகள்**</u><br>(i)ஒட்டுதல் (Symbol: ∪)<br>(ii) வெட்டுதல் (Symbol: ∩)<br>(iii) வேறுபாடு (Symbol: -)<br>(iv) கார்டீசியன் பெருக்கல் (Symbol: X)<br>**விளக்கம் மற்றும் பொருத்தமான ஒரு எடுத்துக்காட்டு** | 2<br><br><br><br>3 |
| 37 (அ) | **DML – தரவு கையாளுதல் மொழி**<br>**DDL - தரவு வரையறை மொழி**<br>**DCL - தரவு கட்டுப்பாட்டு மொழி**<br>**TCL - பரிவர்த்தனை கட்டுப்பாடு மொழி**<br>**DQL - தரவு வினவல் மொழி**<br><br>**DML –** INSERT, UPDATEமற்றும் DELETE<br>**DDL -** CREATE,ALTER,DROPமற்றும் TRUNCATE<br>**DCL –** GRANT மற்றும் REVOKE<br>**TCL -** COMMIT, ROLLBACK மற்றும் SAVEPOINT<br>**DQL -** SELECT<br>**விளக்கம் எழுதவும்** | 2<br><br><br><br><br><br>3 |
| **(அல்லது)** | | |
| (ஆ) | ▪ பைத்தான் பயனிலா (garbage) மதிப்புகளைச் சேகரிக்கும் தானியங்கியைப் பயன்படுத்துகிறது. இந்த பண்புக்கூறு C++ ல் கிடையாது.<br>▪ C++ நிலையான வகையைச் சார்ந்த மொழி, ஆனால் பைத்தான் ஒரு மாறக்கூடிய வகையைச் சார்ந்த மொழியாகும்.<br>▪ பைத்தான் வரி மொழி மாற்றி மூலம் இயங்குகிறது. ஆனால் C++ நிரல்பெயர்ப்பியின் மூலம் தொகுக்கப்பட்டு இயக்கப்படுகிறது.<br>▪ C++ நிரல் குறிமுறையைக் காட்டிலும் பைத்தான் குறிமுறை 5லிருந்து 10 மடங்கு குறைவானது.<br>▪ பைத்தானில், வெளிப்படையாக தரவினங்களை அறிவிக்க தேவையில்லை. ஆனால் C++ -ல் அவை அறிவிக்கப்பட வேண்டும்.<br>▪ பைத்தானில், ஒரு செயற்கூறு எந்த வகை செயலுருபையும் ஏற்கும். மேலும், முன்னதாக எந்த ஒரு அறிவிப்பும் இல்லாமல் பல மதிப்புகளை திருப்பியனுப்பும். ஆனால் C++ return கூற்று ஒரே ஒரு மதிப்பை மட்டுமே திருப்பியனுப்பும்.<br>**(ஏதேனும் ஐந்து எழுதினால் மட்டும் போதுமானது)** | 5 |

<table>
<tr><th>வினா எண்</th><th>விடை</th><th>மதிப்பெண்</th></tr>
<tr><td>38 (அ)</td><td>பைத்தானில் ஒருCSV கோப்பினை படிக்க csv.reader( ) செயற்கூறுமற்றும் DictReader இனக்குழு என இரண்டு வழி முறைகள் உள்ளன.<br>i) csv.reader( ) செயற்கூறை பயன்படுத்துதல்:<br>▪ reader() செயற்கூறானது கோப்பின் ஒவ்வொரு வரியையும் படித்து அவற்றை நெடுவரிசைகளின் பட்டியலாக (List) அமைக்கும்.<br>▪ இச்செயற்கூறை பயன்படுத்தி பயனர் கோப்பின் தரவுகளில் உள்ள இரட்டை மேற்கோள் குறி(“”), (|) மற்றும்(,) போன்ற பல்வேறு வடிவமைப்புகளை பயன்படுத்தி படிக்கலாம்.<br>csv.reader( ) செயற்கூறின் தொடரியல்:<br>csv.reader(fileobject,delimiter,fmtparams)<br>பொருத்தமான ஒரு எடுத்துக்காட்டு<br>ii) DictReader இனக்குழுவை பயன்படுத்துதல்:<br>▪ இது ஒரு பொருளை உருவாக்கி அதை Dictionaryயில் இணைக்கும்.<br>▪ இது காற்புள்ளியால்பிரிக்கப்பட்ட CSV கோப்பின் முதல் வரியை Dictionaryதிறவுகோல் (DictionaryKey) என கருதும்.<br>▪ அடுத்தடுத்த வரிசையில் உள்ள நெடுவரிசையானது Dictionary–ன் மதிப்புகளாக செயல்படும். இவற்றை உரிய திறவுகோல் மூலம் அணுக முடியும்.<br>பொருத்தமான ஒரு எடுத்துக்காட்டு</td><td>1<br>2<br>2</td></tr>
<tr><td colspan="3">(அல்லது)</td></tr>
<tr><td>(ஆ)</td><td>▪ முகப்பு பொத்தான் (Home Button)<br>இப்பொத்தானை பயன்படுத்தி அசல் காட்சிதிரையை பெறலாம்.<br>▪ முன்னோக்கி / பின்னோக்கி (Forward/Backward)<br>முந்தைய இடத்திற்கோ அல்லது பின்னோக்கி செல்லவோ பயன்படுகிறது.<br>▪ பான் ஆக்ஸில் பொத்தான்(Pan Axis Button)<br>கிளிக் செய்து கொண்டே இழுத்து வரைபடத்தினுள் சுற்றி நகரலாம்.<br>▪ பெரிதாக்கு பொத்தான் (Zoom Button)<br>பெரிதாக்குவதற்கு இடது கிளிக் செய்தும்சிறிதாக்குவதற்கு வலது கிளிக் செய்தும் நகர்த்த வேண்டும்.<br>▪ சப்ப்ளாட் கட்டமைப்பு பொத்தான்(Configure Subplots Button)<br>படம் மற்றும் வரைவிடத்திற்கு இடையே உள்ள இடைவெளியை கட்டமைக்க உதவுகிறது.<br>▪ படத்தை சேமிக்கும் பொத்தான் (Save Button)<br>படங்களை பல்வேறு வடிவங்களில் சேமிக்க உதவும்.<br>(ஏதேனும் ஐந்து மட்டும்.பொத்தான் வரையத் தேவையில்லை)</td><td>5</td></tr>
</table>